

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை வாசலில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி ஆகியோர் மராத்தான் போட்டியை கொடி அசைத்து துவக்கி வைத்தனர். பின்பு குருதிக்கொடை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் குருதிக்கொடை அளித்தார். உடன் மதுரை மேயர் இந்திராணி பொன் வசந்த், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் மற்றும் திரளானோர் கலந்துகொண்டனர்.

### மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை! ஆளும் பா.ஜ.க. அரசை கண்டித்து

# மதுரையில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி - மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஜூலை 24-

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து இனக்கலவரமும் வன்முறையாட்டம் நடைபெற்று வருகிறது. அதன் உச்சகட்டமாக ஒரு கும்பல் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்கள். இது போன்ற மனித குலத்தையே அச்சுறுத்தும் சம்பவங்களை கண்டு கொள்ளாத மணிப்பூரை ஆளும் மாநில பா.ஜ.க. அரசையும், ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரையில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட மாவட்டங்களின் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பாக இன்று (24ஆம் தேதி) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என மதுரை வடக்கு மாவட்ட







செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள், அதன் விவரம் வருமாறு:-

மணிப்பூரில் கடந்த சில மாதங்களாக இனக்கலவரம் நடந்து கொண்டிருக்கிறது, இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர், பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் உடைமைகளை இழந்து அகதிகளாகியுள்ளனர். இந்த கலவரத்தின் உச்சகட்டமாக பெண்களை நிர்வாணமாக்கி, ஊர்வலமாக அழைத்துச் சென்று ஒரு கும்பல் பாலியல் வன்கொடுமை செய்துள்ளது. இதனை தடுக்கச் சென்ற அவரது உறவினர்களையும் சுட்டுக் கொண்டுள்ளனர்.

இதைக் கண்டு கொள்ளாத நாட்டின் பிரதமர் வெளிநாடு பயணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிநாடுகளுக்கு சென்று வருகிறார், மணிப்புரை ஆளும் பாஜக அரசு முதல்வர் வன்முறை ஆட்டங்களை கட்டுப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்கவில்லை, பெண்கள், பொது மக்களுக்கு பாதுகாப்பு இல்லை மணிப்பூர் மக்கள் நாள் தோறும் வீதியில் அஞ்சி வாழ்ந்து வருகின்றனர்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை கண்டு கொள்ளாத மணிப்புரை ஆளும் மாநில பா.ஜ.க. அரசையும், ஒன்றும் தெரியாதது போல் கண்டுகொள்ளாமல் இருக்கும் ஒன்றிய பாஜக அரசையும் கண்டித்து இன்று(24.07.2023 திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்டங்களின் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் இரு வண்ணக் கொடியை கையில் ஏந்தி பொதுமக்களுடன் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பிக்குமாறும், இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பலரும் பெரும் ஒத்துழைப்பு வழங்கி சிறப்பிக்குமாறும் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து

# விருதுநகர் மாவட்ட மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்-தங்கம் தென்னரசு அறிக்கை

விருதுநகர், ஜூலை 24-

விருதுநகர் தெற்கு/ வடக்கு மாவட்ட தி.மு. கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைச் செயலாளரும், மாநில மகளிரணி செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் அறிவுறுத்தலின் படி, ஒன்றிய பா.ஜ.க அரசு ஆளும் மாநிலமான மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் மற்றும் பெண்கள் பாலியல் துன்புறுத்தலை கண்டித்து இன்று (24.07.2023 திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் விருதுநகர், கலைஞர் திடலில் (தேசபந்து மைதானம்), விருதுநகர் தெற்கு/ வடக்கு மாவட்ட மகளிரணி சார்பாக மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.





இவ் ஆர்பாட்டத்தில் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய மற்றும் பேரூர் மகளிரணி அமைப்பாளர்கள்/ துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிரணி உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிகையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து - கடலூர் மேற்கு மாவட்டம்

# விருத்தாசலத்தில் மகளிர் அணி கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், ஜூலை 24-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தாய்மையை நிர்மாணப் படுத்தி தலைகுனியை வைத்த மணிப்பூர் நிகழ்வை தடுக்க தவறிய ஒன்றிய மோடி அரசை கண்டித்து விருத்தாசலம் பாலக்கரையில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின அரசு கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய நிலையில் சமீபத்தில் இரண்டு பழங்குடி இன பெண்களை நிர்வாணப் படுத்தப்பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுமையையும் பதற வைத்துள்ளது.

தாய்மையை கலங்கப் படுத்திய இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்க தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

பிரதமர் மோடியின் ஒன்றிய பா.ஜ.க. அரசு இது போன்ற நடவடிக்கைகளை தடுக்க தவறியதை கண்டித்து கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்



ஆணைக்கிணங்க கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் விருத்தாசலம் பாலக்கரையில் இன்று 24.07.2023 திங்கள் கிழமை காலை 9 மணி அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மகளிர் அணி மகளிர் தொண்டரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பெருந்தலைவர்கள் துணைத்தலைவர்கள் மண்டல குழு தலைவர்கள் நகர பேரூர் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என தமது அறிக்கையில் அமைச்சர் சி.வெ. கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை

# எவ்வளவு நாளில் கட்டி முடிக்கப்படும்? - நிதி ஆதாரம் உள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24-

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் விரைந்து நிறைவேற்ற ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்தும் அதற்குண்டான நிதி ஆதாரம் திரட்டல் குறித்தும் பணி நிறைவடைய உத்தேசமாக எவ்வளவு காலம் ஆகும் என்பது குறித்தும் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:-

மதுரையில் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) கட்டுமானப் பணியை விரைவுபடுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா அப்படியானால், கட்டுமானப் பணி நிறைவடைய தாமதமானதற்கான காரணங்கள் அதன் விவரங்கள் யாவை?

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் யூனியன் அரசு இந்த எய்ம்ஸ் கட்டுமானப் பணிக்காக வழங்கிய நிதி விவரங்கள் யாவை?

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இது வரை செலவழிக்கப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் கட்டுமானப் பணி நிறைவடை வதற்கான உத்தேச காலம் விவரங்கள்

மதுரையில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் ஒவ்வொரு துறைக்கும் ஆசிரியர்களை அரசு நியமித்துள்ளதா? அப்படியானால், எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் செயல்பாடு குறித்த விவரங்கள்?

இதற்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தில் உள்ள ராஜாங்க அமைச்சர் பதில் டாக்டர் பாரதி பிரவின் பவார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

மதுரை எய்ம்ஸ் அமைப்பதற்கு, எல்லைச் சுவர் கட்டுவது உள்ளிட்ட முதலீட்டுக்கு முந்தைய நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. திட்ட மேலாண்மை ஆலோசகர் (Project Management Consultant) 07.06.2023 அன்று நியமிக்கப் பட்டார். ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) மூலம் கூடுதல் பட்ஜெட் வள (EBR) நிதியுதவியின் கீழ் இத்திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டதிலிருந்து திட்டத்தை செயல்படுத்துவதற்கு அதிக காலம் எடுத்துள்ளது. அதன்படி, தொடக்க அறிக்கை, வளாக மாஸ்டர் பிளான், வசதி திட்டமிடல், மருத்துவமனை வடிவமைப்பு கருத்து மற்றும் உபகரண திட்டமிடல் ஆகியவற்றை தயாரித்த பிறகு, 2021 மார்ச் 26 அன்று ஜப்பான் அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.



அமைச்சரவை ஒப்புதல் அளித்ததால் திட்ட செலவு ரூ.1264 கோடி மற்றும் திருத்தப்பட்ட செலவு ரூ. 1977.8 கோடி JICA மூலம் 150 படுக்கைகள் கொண்ட தொற்று நோய் தடுப்பு மற்றும் வேறு சில சேர்த்தல்களின் அடிப்படையில், அமைச்சகம் இவ்விஷயம் விரிவாக ஆய்வு செய்ய திருத்தப்பட்ட செலவு மதிப்பீட்டுக் குழுவை (RCC) அமைத்தது.

அதன் பிறகு, நிதி மதிப்பீட்டிற்கான திட்டத்தை அமைச்சகம் RCC அறிக்கையுடன் செலவினத் துறைக்கு (DoE) சமர்ப்பித்தது. ஆய்வுக்குப் பிறகு, DOE இந்த முன்மொழிவை மதிப்பிட்டு ஒப்புதல் அளித்தார், மேலும் இந்த அமைச்சகத்தால் 11.10.2022 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மொத்த திட்ட மதிப்பான ரூ.1977.8 கோடியில், 82% செலவை JICA வின் கடனாகவும், மீதமுள்ளவை இந்திய அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும். கடன் ஒப்பந்தத்தின்படி, எய்ம்ஸ் மதுரையை அமைப்பதற்கான JICA கடனுக்கான வழங்கல் நடைமுறையானது உறுதிமொழி நடைமுறை மற்றும் திருப்பிச் செலுத்தும் நடைமுறை ஆகும். இந்திய அரசு முதலீட்டுக்கு முன் எல்லைச் சுவர் கட்டுதல் உள்ளிட்ட பணி களுக்கு. ரூ12.35 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. எய்ம்ஸ் மதுரைக்கு இந்திய அரசின் சம்பளம், மூலதனம் மற்றும் பொதுத் தலைவரின் கீழ் இன்று வரை வழங்கப்பட்ட மொத்த மானியம் ரூ.69.99 கோடி. கடன் ஒப்பந்தத்தின்படி, திட்டத்தை செயல்படுத்துவதற்கான காலம் 5 ஆண்டுகள் மற்றும் 8 மாதங்கள் (மார்ச் 2021 முதல் அக்டோபர் 2026 வரை).

தமிழ்நாடு அரசுடன் கலந்தாலோசித்து ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள தற்காலிக வளாகத்தில் இருந்து 50 மாணவர்களுக்கான AIIMS மதுரைக்கான MBBS வகுப்புகள் ஏப்ரல், 2022 முதல் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது எம்பிபிஎஸ் படிப்புக்கு 99 மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

# நெல்லை மாநகரக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு. சுப்பிரமணியன் அறிக்கை

நெல்லை, ஜூலை 24-

நெல்லை மாநகர தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் வைத்து இன்று (24.07.2023 திங்கட்கிழமை)மாலை 6 மணி அளவில் மாநகர அவை தலைவர் டாக்டர். பொன்மணி தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று உரையாற்றுகிறார். என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் வைத்து இன்று (24.07.2023 திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில் மாநகர அவை தலைவர் டாக்டர்.பொன்மணி தலைமையில் தச்சநல்லூர் பகுதி செயலாளர் சுப்பிரமணியன், பாளையங்கோட்டை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி வரவேற்புரை ஃஆற்றுகிறார்.

இந்த கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் மாநகர கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிறைவில் மாநகர பொருளாளர் அண்ணாதுரை நன்றி உரையாற்றுகிறார்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் தமிழர் தலைவர் கலைஞர் அவர்களின்நூற்றாண்டு விழா!

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹாக்கி மைதானத்தில், நேற்று (23.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னையில் நடைபெறவுள்ள 7ஆவது ஆசிய ஆடவர் ஹாக்கி 2023 போட்டியினை 2023 போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில், தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகைதந்த ஆசிய ஹாக்கி வெற்றிக் கோப்பையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், முன்னிலையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் வரவேற்று பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளிடையே அறிமுகப்படுத்தி, பாஸ் தி பால் கோப்பை (PASS THE BALL TROPHY TOUR) சுற்றுப்பயணத்தை வழியனுப்பி வைத்தார்.



தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகர்கோவில் பொன்னப்ப நாடார் திடலில் குமரி கிழக்கு மாவட்ட செயலாளரும் நாகர்கோவில் மாநகர மேயருமான மகேஷ் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். உடன் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான் மாநில மீனவரணி துணைச் செயலாளர் பசலியான், கலை இலக்கிய பேரவை மாநில செயலாளர் தில்லைசெல்வம், சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் ஜோசப் ராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த், மாவட்ட அவைத் தலைவர் எப்எம் ராசரத்தினம், பொருளாளர் கேட்சன்மற்றும் கழகம் முன்னோடியினர் உள்ளனர் .